# ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

## தொழிலாளர், காவலர், சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிகள் (III ஆம் தரம்)

## PL – 1 சம்பள அளவிற்கான ஆட்சேர்ப்பு

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் III ஆம் தரத்தின் தொழிலாளர், காவற்காரர், சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிகளுக்கான பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. ஆட்சேர்ப்பு முறை:-

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளில் இருந்து ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் எண்ணிக்கையின் பிரகாரம் சேர்த்துக்கொள்ளப்பவார்கள். அப்போது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

02. தேவையான தகைமைகள்:-

(i) கல்வித் தகைமைகள்:-
க.பொ.த (சாதரண தர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக்குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) தொழில்சார் தகைமை
உரிய துறையில் பெற்றுக்கொண்டுள்ள தொழில்சார் தகைமை விசேட தகைமையாக கருதப்படும்.

(iii) அனுபவம்:-
உரிய துறையில் பெற்றுக்கொண்டுள்ள அனுபவம் விசேட தகைமையாக கருதப்படும்.

(iv) உடல் தகைமை
சகல அபேட்சகர்களும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவை புரிவதற்கும் பதவியில் கடமை புரிவதற்கும் போதியளவு உடல் மற்றும் உள தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(v) ஏனையவை:-

- ❖ இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.
- ❖ விண்ணப்பதாரர் நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்
- ❖ விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியில் பதவிக்கு ஆட்சேர்க்கப்படுவதற்கான தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.
- ❖ வெற்றிடங்கள் காணப்படும் மாவட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

வெற்றிடங்கள் காணப்படும் மாவ்ட்டங்கள்

| தொழிலாளர் | காவற்காரர் | சூற்றுலா வீடுதிப் பொறுப்பாளர் |
|---|---|---|
| கண்டி | கண்டி | நுவரெலிய |
| மாத்தளை | மாத்தளை | மாத்தறை |
| மாத்தறை | நுவரெலிய | |
| கம்பக | கேகாலை | |
| குருணாகல் | கொழும்பு | |
| களுத்தறை | காலி | |
| இரத்தினபுரி | குருணாகல் | |
| ஹம்பாந்தொட்டை | கம்பக | |
| பதுள்ளை | களுத்தறை | |
| கொழும்பு | | |

03. சேவையிலீடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :-

(i) இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். விதவை மற்றும் அனாதை/தபுதாரர் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தல் வேண்டும்.

(ii) நியமனம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

(iii) இந்நியமனம் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2009.02.20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்கமடைய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் திருத்தப்பட்ட நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டது.

04. வயதெல்லை:-

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. சம்பள அளவுத் திட்டம்:-

இப்பதவிக்காக ரூபா 11,730 - 10x120-10x130-10x140-100x145-12x160 - 17600/- மாதச் சம்பளத்திற்கு உரித்தாகும்.

06. கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்காக கீழே காட்டப்பட்டுள்ள புள்ளி நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள் | 30 |
| 02 | தொழில் தகைமை | 30 |
| 03 | அனுபவம் | 35 |
| 04 | நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமை | 05 |
| | மொத்தப் புள்ளிகள் | 100 |

குறிப்பு :-

(i) எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்த தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(ii) நேர்முகப் பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

07 விண்ணப்தாரியின் ஆளடையாளம் :-

எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்த தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகப் பரீட்சையின் போது தமது ஆளடையாளத்தினைப் நிரூபிப்பதற்காக கீழே காட்டப்பட்டுள்ள அடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

(i) ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

08.(அ) விண்ணப்பப் படிவங்கள் 2013.11.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே காட்டப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பணிப்பாளர் நாயகம்,<br>
ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்<br>
1095, கண்டி வீதி<br>
கெட்டம்பே<br>
பேராதனை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரியொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படுகின்றது. விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை A4 அளவுடைய தாளின் இருபக்கங்களையும் உபயோகித்து முதற்பக்கத்தில் 1 முதல் 4 வரையிலும் 02 ஆம் பக்கத்தில் 05-10 வரையிலும் வரும் வகையில் தயாரித்து தமது கையெழுத்தினால் பூர்த்திசெய்ய வேண்டும்.

(இ) விண்ணப்ப படிவங்களை இட்டு அனுப்பும் கடிதவுறையின் இடது மேல் மூலையில் **“ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் III ஆம் வகுப்பின் தொழிலாளர்/ காவலாளி/ சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம்”** என தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும்.

(உ) விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அரச பாடசாலையொன்றின் அதிபர் / சமாதான நீதவான் / சத்திய ஆணையாளர் /சட்டத்தரணி / பிரசித்தி பெற்ற நொத்தாரிசு /முப்படைகளின் அத்தியகட்சகர் தரத்திலான ஒரு உத்தியோகத்தர் அல்லது ரூபா 22,935/- இற்கு மேல் மாதாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரசின் நிரந்தரப் பதவியொன்றினை வகிக்கும் அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஊ) ஏற்கனவே அரச சேவையிலுள்ள அல்லது மாகாண அரச சேவையிலுள்ள ஒருவர் தமது விண்ணப்பங்களைத் தாம் சேவை புரியும் திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

(எ) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பபடிவத்தின் மாதிரிக்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதங்கள் போன்ற முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

09. பொய்யான தகவல்களை வழங்குதல்:-

உங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவலொன்று பொய்யானது அல்லது பிழை எனவோ சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டால் உங்களின் அபேட்கத்துவம் செல்லுபடியற்றதாக்கப்படும்.

அவ்வாறு பொய்யானது அல்லது பிழை எனவோ சேர்த்துக்கொண்டதன் பின்னர் வெளிப்படுத்தப்பட்டால் அதற்குரிய நடைமுறைகளுக்கு உடபட்டு சேவையிலிருந்து நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின் படி

பணிப்பாளர் நாயகம்,<br>
ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்<br>
1095, கண்டி வீதி<br>
கெட்டம்பே<br>
பேராதனை.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

(அலுவலக உபயோகத்திற்காக)

## ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

## III ஆம் வகுப்பின் தொழிலாளர்/காவலர்/சுற்றுலா விடுதிப்பொறுப்பாளர் பதவிகளுக்கான ஆட்சேர்த்தல்

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ☐ சிங்களம் 2 தமிழ் 3 ஆங்கிலம் 4

01 (i) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர்:-……………………..
……………………………………………………………………………………………………
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்.) உதாரணமாக: SILVA G.A

(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்:- ……………………………………………………………

(iii) முழுப் பெயர்:-…………………………………………………………………………

02 (i) சொந்த முகவரி ……………………………………………………………………………………

(ii) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி ……………………………………………………

03 (i)பால் :- ☐ ஆண் - 0 பெண் - 1

(ii) இனம் :- ☐ சிங்களம் - 1 தமிழ் - 2 இந்திய தமிழர் - 3
முஸ்லீம் - 4 வேறு - 5

(iii) தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐

(iv) மாவட்டம்:- ……………………………………………..

(v) தேர்தல் தொகுதி :-……………………………………..

04 (i) பிறந்ததிகதி: ☐☐☐☐ ☐☐ ☐☐
ஆண்டு மாதம் திகதி

(ii) 2013………………….. தினத்தன்று வயது :-
☐☐☐☐ ☐☐ ☐☐
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

(iii) விவாகமானவரா / விவாகமாகாதவரா :- ☐ விவாகமாகாதவர் – 1 விவாகமானவர் – 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

05. (i) கல்வித் தகைமைகள்

(அ) கல்விப் பொதுத் தராதர (சா/த) ஆண்டு

| ஆண்டு | பாடங்கள் | சித்தி | ஆண்டு | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

(ii) வேறு

(iii) மேற்குறித்த கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக கல்விச் சான்றிதழ்களின் நிழற்பட பிரதிகளை இணைத்து அனுப்பவும்.

06. தொழிற் தகைமைகள்:-

07. அனுபவம்:-

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை :-

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானதும் சரியானவையெனவும் நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என்று நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அறிய நேர்ந்தால் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனம் பெற்றபின் அந்தத் தவறு கண்டு பிடிக்கப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி : .................................

…..................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

09 (i) <u>விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்.</u>

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு / திருமதி / செல்வி ......................................................... அவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் அவர்/அவள் 2013 ......................... மாதம் ........ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

....................................................................
கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :- ......................................................
பதவி :- ......................................................
முகவரி :- ...................................................................
திகதி : .....................................
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்.)

10. (ii) திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

விண்ணப்பதாரியால் மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்து பார்க்கப்பட்டதுடன், அவரின்/ அவளின் வருகை மற்றும் நடத்தை திருப்திகரமானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவன்/ அவள் இந்த கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைகயில் மேற்குறிப்பிட்ட பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது.

............................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,

பதவி :- ………………………
திகதி : ......................................